**அளவுக் கூறுகள் கட்டளைகள் மற்றும் சேவைகள் நிதியம் - 2022**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அளவுக் கூறுகள் கட்டளைகள் மற்றும் சேவைகள் நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, திரட்டிய நிதியம் தொடர்பான கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதயம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள

எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு இலக்கம் 7 இன் 69 ஆம் பந்திக்கு இணங்க சொத்தொன்றின் பெறுமானத் தேய்வு கழித்தல் ஆரம்பிப்பது அதனை பயன்படுத்துவதற்காக தயார் நிலைக்கு கொண்டுவந்த பின்னராகும். எனினும் ரூபா 25,832,345 தொகை பெறுமதியான சொத்தொன்று 2022 திசெம்பர் 29 திகதி செயற்படு நிலைமையை அடைந்திருந்த போதிலும் முழு வருடத்திற்குமாக பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 5,124,005 பெறுமதியினால் பெறுமானத்தேய்வு மிகையாகக் காட்டப்பட்டிருந்தது, | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சொத்துக்கள் பயன்படுத்துவது தொடர்பாக கவனம் செலுத்தப்படாமல் பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டிருந்தது. 2023 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது இப் பிழையினை சரிசெய்வேன். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது மூலதனத் தன்மையிலான கணினி உபகரணங்கள் மற்றும் தொலைபேசி தொகுதியை நவீனமயப்படுத்தும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 3,256,414 தொகை பெறுமதியான 06 செலவுகள் திருத்தவேலை செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இதன் கீழ் Sandblast sticker பயன்படுத்தி மறைக்கப்படல் சரியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஏனைய செலவுகளை பரிசோதனை மேற்கொண்டு சொத்துக்கள் கணக்குகளுக்கு பதிவு செய்து மற்றும் உரிய முறையில் பெறுமானத்தேய்வு சீராக்கல் மேற்கொண்டு சரிசெய்வேன். | மூலதனத் தன்மையிலான செலவுகள் மீண்டுவரும் செலவுகள் என கணக்கீடு செய்யக்கூடாது. |
| (ஆ) | அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளுக்காக பிரதேச சபையினால் அறவிடப்பட்டிருந்த ரூபா 372,000 தொகைக்கான சேவைக் கட்டணம் கட்டிட நிர்மாணவேலைக் கணக்கிற்கு மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. | இச் செலவு மூலதனச் செலவு ஒன்றென இனங்காணப்பட்டதை சரிசெய்வேன் என அறிவிக்கின்றேன். | மீண்டுவரும் தன்மையிலான செலவுகள் மூலதனச் செலவுகள் என கணக்கீடு செய்யக் கூடாது. |
| (இ) | மீளாய்வாண்டின் போது இணைய அபிவிருத்தி மற்றும் உபகரண கொள்வனவுக்காக செலுத்தியிருந்த முற்பணங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,667,100 தொகை இயந்திர உபகரணக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | முற்பணம் செலுத்துதல் இயந்திர உபகரணக் கணக்கிற்கு பதிவு செய்யப்பட்டிருந்த தவறினை சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். | முற்பணக் கொடுப்பனவு செலுத்துதல் மூலதனப்படுத்தக் கூடாது. |
| (ஈ) | கடந்த ஆண்டின் போது கட்டிடங்கள் சேர்த்தலுக்காக கணக்கிற்கு செலுத்த வேண்டிய ரூபா 595,778 தொகை மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்த போது செலுத்த வேண்டிய கணக்கில் இருந்து அகற்றுவதற்கு பதிலாக கட்டிடக் கணக்கிற்கு கூட்டியிருந்தமையால் அதே தொகையினால் சொத்துக்கள் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | தவறுதலாக இது கட்டிடக் கணக்கிற்கு பதிவு செய்யப்பட்டிருந்தது. தேவையான சரிசெய்தல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | உரிய கொடுப்பனவுகள் சரியாக இனங்கண்டு உரிய கணக்கிற்கு சீராக்கல் மேற்கொள்ள வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்காக சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக் கூற்றின் படி காசு மீதிக்கு சீராக்கல் செய்திருந்த | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (i) இனங்காணப்படாத நேர் அனுப்புதல் தொகைகள் பெறுவனவு | 10,395,572 | பெறுவனவுகளை உறுதிசெய்வதற்கான ஆவணங்கள் | இந்த இனங்காணப்படாத பெறுவனவுகளை இனங்காண்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதியத்தின் வங்கி இணக்கக் கூற்றில் இணங்காணப்படாத கொடுப்பனவுகள் மற்றும் பெறுவனவுகளை மிகைவும் விரைவாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ii) இனங்காணப்படாத கொடுப்பனவு | 76,587,740 | கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள், கொடுப்பனவுகளை உறுதிப்படுத்துவதற்குரிய ஆவணங்கள் | இந்த இனங்காணப்படாத கொடுப்பனவுகளை இனங்காண்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | - மேற்படி - |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1995 இன் 35 ஆம் இலக்க அளவுக் கூறுகள் கட்டளைகள் மற்றும் சேவைகள் சட்டத்தின் பிரிவு 20(1) (அ) மற்றும் 37 | வியாபாரத்தில் பயன்படுத்தப்படும் அனைத்து அளவை உபகரணங்களும் வருடாந்தம் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு அனைத்து உபகரணங்களும் மெய்மையாயப்படுகின்றது என உறுதிப்படுத்துவதற்கான முறையான செய்முறை ஒன்று நிதியத்தில் இது வரை நிறுவப்பட்டிருக்கவில்லை. | தற்போது இலட்சினை பொறிப்பதற்காக திருத்த வேலை மேற்கொண்ட தராசுகள் சமர்ப்பிக்கப்படும் சேவை முகவர் நிறுவனம் மற்றும் நபர்களிடம் தகவல்கள் முறைப் பிரகாரம் பெற்றுக் கொண்டு அனைத்து அளவை உபகரணங்களுக்கும் பதிவுஇலக்கம் ஒன்று வழங்கி முறையான தரவு முறைமையொன்று தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதுடன் அதன் முன்னேற்றம் அடுத்த கணக்காய்வின் போது அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) நிதிப் பிரமாணம் 1647 (ஆ) | வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக வருடாந்தக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | வாகனங்கள் தொடர்பாக தரவு முறைமையொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்கங் கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பந்தி 3.1 | அரசாங்க வாகனங்கள் அனைத்து எரிபொருள் எரிவுப் பரிசோதனையின் பின் 12 மாத காலவரையறைக்கு பின்னர் அல்லது 25,000 கிலோ மீற்றர் தூரம் ஓடிய பின்னர் அல்லது என்ஜினுடன் தொடர்புடைய முக்கியமான திருத்த வேலைகளின் பின்னர் ஆகிய விடயங்களிடையே ஆரம்பத்தில் வரும் சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தில் காணப்படும் 17 வாகனங்கள் தொடர்பாக அவ்வாறான பரிசோதனையொன்று மேற்கொண்டிருக்கவில்லை. | எரிபொருள் எரிவுப் பரிசோதனைக்காக வாகனம் ஒன்றிற்கு உள்ளீடு செய்யக் கூடிய உச்சமட்ட கொள்திறன் எரிபொருளை பயன்படுத்தி நிறுத்தாமல் தொடர்ச்சியாக வாகனம் ஓட்டப்பட வேண்டியிருந்த போதிலும் QR கோட்டாவின் மூலம் எரிபொருள் வரையறுக்கப்பட்டமையால் வாகனங்களுக்கு எரிபொருள் வழங்குவதில் சிக்கல் நிலைமை ஒன்று காணப்பட்டமையால் 2022 ஆண்டின் போது எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 1.7 முதலீட்டு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்தின் நடைமுறைக் கணக்கில் மீளாய்வாண்டு ஜனவரி முதல் திசெம்பர் வரை ரூபா 95 மில்லியன் முதல் ரூபா 201 மில்லியன் வரை வீச்சில் மீதியொன்று பேணப்பட்டு வந்திருந்ததுடன் இந்த மீதி நிதியத்தின் மாதாந்த தேவைப்பாட்டுடன் ஒப்பீடு செய்யும் போது 63 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான மிகைத் தொகையொன்று என அவதானிக்கப்பட்டது. இந்த மிகை மீதியை ஆக்கபூர்வமாக முதலீடு செய்து நிதியத்திற்காக வட்டி வருமானம் உழைப்பதற்கு இயலுமாக இருந்த போதிலும், முகாமைத்துவத்தினால் அது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை. | 2023 ஆண்டு முதல் மாதாந்த பணத்தேவைப்பாட்டினை கவனத்தில் எடுத்து நடைமுறைக் கணக்கின் மீதியை பரிசோதனை செய்து மிகையாகவுள்ள மீதிகளை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அதன் படி 2023 ஜனவரி மாதம் 17 திகதி ரூபா 50 மில்லியன் தொகையும் 2023 மார்ச் 27 திகதி ரூபா 20 மில்லியன் தொகையும் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டது. | நடைமுறைக் கணக்கின் மேலதிக மீதிகள் ஆக்கபூர்வமாக முதலீடு செய்து நிதியத்திற்கு வட்டி வருமானம் உழைத்துக் கொள்ள வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 75,092,226 இற்கான மிகை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 66,445,028 தொகை ஆக இருந்தது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 8,647,198 இற்கான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு ஒட்டுமொத்த செலவுகள் ரூபா 8,885,858 தொகையினால் குறைவடைதல் முக்கியமாக காரணமாக இருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவனம் சார் சட்டகத்தினை வலுப்படுத்தும் குறிக்கோளுடன் முக்கியமாக அளவுக் கூறுகள் கட்டளைகள் மற்றும் சேவைகள் சட்டத்தின் மற்றும் சட்டங்கள் விதிகளை நாளதுவரை ஆக்கலின் முன்னேற்றம் 10 சதவீதமும் உள்ளகச் செயற்பாடுகளுக்கான தொழிநுட்பத் தீர்வுகள் மற்றும் வழிகாட்டல்களை அறிமுகப்படுத்தும் செய்முறைகளின் முன்னேற்றம் 20 சதவீதமுமாக குறைந்த மட்டத்தில் முன்னேற்றம் காணப்பட்டது. | இதற்காக வர்த்தக அமைச்சுச் செயலாளரினால் 2023.02.23 திகதி குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன், அதன் மூலம் அளவுக் கூறுகள் கட்டளைகள் மற்றும் சேவைகள் சட்டத்தில் திருத்தங்கள் மற்றும் உள்ளகச் செயற்பாடுகளுக்காக தொழிநுட்ப தீர்வுகள் மற்றும் வழிகாட்டல்களை அறிமுகப்படுத்தும் செய்முறையின் திருத்தங்களுக்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கு கணிசமான காலம் ஒன்று எடுப்பதற்கு நேரிடும். | திட்டமிடப்பட்ட கருமங்கள் மூலம் எதிர்பார்த்த முன்னேற்றத்தை நெருங்க வேண்டும். |
| (ஆ) | தேசிய அளவைகள் ஆய்வுகூடம் ஒன்று சர்வதேச வரவேற்பினை பெற்றுக் கொள்வதற்காக (ISO 17025 ISO 9001) 08 தொழிநுட்ப ஆய்வுகூடங்கள் சர்வதேச கட்டளைகளுக்கு பொருந்தக் கூடிய விதமாக முன்னேற்றுவதற்காக திட்டமிடப்பட்ட போதிலும், 06 ஆய்வுகூடங்களின் அலுவல்கள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதே போல் சர்வதேச நிபுணர்களின் பயிற்சி, ஆலோசனை நிகழ்வுநிலையில் பெற்றுக்கொள்ளல் 50 சதவீதமும் மற்றும் சர்வதேச நிபுணர்களின் மீளாய்வு பெற்றுக் கொள்ளல் 40 சதவீதத்தினாலும் நிறைவேற்றப்பட்டிருந்தது. | இதுவரை இரண்டு ஆய்வுகூட அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் ஆகஸ்ட் மாத இறுதியில் அந்த ஆய்வுகூடங்களின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றம் பெற்றுக் கொள்ள முடியும். இந்த அலுவல்களின் போது சர்வதேச நிபுணர்களின் ஆலோசனைகள் மற்றும் மீளாய்வுகள் எதிர்பார்த்தவாறு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திட்டமிடப்பட்ட கருமங்களின் மூலம் எதிர்பார்த்த முன்னேற்றத்தை நெருங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | திறமையான மற்றும் கற்ற சமுதாயமொன்றை ஏற்படுத்துவதற்காக அளவைசார் அறிவை விரிவாக்கல் மற்றும் (சார்ந்த) நிறுவனங்களிடையே பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை மேம்படுத்துதல் என்ற குறிக்கோளுடன் நிறைவேற்றப்பட்டு இருந்த முன்னேற்றம் 18 இற்கும் 50 இற்கும் இடைப்பட்ட சதவீத மட்டத்தில் காணப்பட்டது. | இதற்காக நடைமுறைசார் செயற்பாடுகள் மற்றும் கோட்பாட்டு ரீதியான நிகழ்ச்சித் திட்டங்கள் 25 மாவட்டங்களும் அடங்கக் கூடிய விதமாக செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டு இருந்ததுடன் 2022 ஆண்டு ஏற்பட்ட நெருக்கடிசார் சுற்றாடல் (அரசியல் மற்றும் எரிபொருள்) க்கு இடையே இவ் இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாமல் போனது. | - மேற்படி - |
| (ஈ) | விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் சுற்றிவளைப்புக்கள் மூலம் பொதுமக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் மற்றும் குறைந்த காலப் பகுதியுள் விசாரணை மேற்கொள்ளும் செய்முறைகளை பூர்த்தி செய்வதன் மூலம் 60 விசாணைகள் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அவற்றில் 14 விசாரணைகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தமையால் முன்னேற்றம் 23 சதவீதமாகக் காணப்பட்டது. | இங்கு நுகர்வோரின் முறைப்பாடுகளுக்காக சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளல் என்பது கருத்தாகும். அத்துடன் 60 நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டு மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டிருந்ததெனவும் அந்த நிகழ்ச்சித் திட்டங்கள் நாடுபூராகவும் காணப்படும் மாவட்ட செயலகங்களில் காணப்படும் அளவை கூறுகள் கட்டளைகள் மற்றும் சேவைப் பிரிவின் மூலம் மேற்கொள்ளும் போது ஏற்படுகின்ற போக்குவரத்து வசதிகள் மற்றும் நிலவிய எரிபொருள் தட்டுப்பாடு காரணத்தினால் 14 நிகழ்ச்சித் திட்டங்கள் அதாவது 23% முன்னேற்றமொன்றினை நெருங்குவதற்கு முடியாக இருந்தது. | - மேற்படி - |
| (உ) | 12 மாவட்டங்களில் அளவை கட்டளைகளை மீள் மெய்மையாய்வதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 04 மாவட்டங்களில் மாத்திரம் இந்த கருமம் நிறைவேற்றப்பட்டிருந்தது. | மாவட்ட அளவை உபகரணங்கள் திணைக்களத்தின் தொழிற்சாலை மூலம் மேற்கொள்ளும் திருத்த வேலைகள பாரிய காலம் ஒன்று எடுத்தல் மற்றும் அதன் பின்னர் தேசிய அளவை ஆய்வுகூடத்தில் அந்த அங்கீகரிக்கப்பட்ட உபகரணங்களுக்கு அளவுத் திருத்த சான்றிதழ் வழங்கும் செய்முறைக்காக போதிய காலம் ஒன்று தேவைப்படுவதினால் மாவட்ட அங்கீகரிக்கப்பட்ட | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | | உபகரணங்கள் ஒரே தடவையில் பெற்றுக் கொள்ளும் போது மாவட்ட கடமைகளை பேணிச் செல்லும் வசதியீனங்கள் காரணத்தினால் 04 மாவட்டங்களின் அந்த கருமம் நிறைவேற்றப்பட்டிருந்தது. | |
| (ஊ) | தேசிய கொள்கைகளுக்கு நேரொத்ததாக தேசிய மற்றும் சர்வதேச குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக 03 நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஒரு நிகழ்ச்சித் திட்டமேனும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இதற்காக நடைமுறைசார் செயற்பாடுகள் மற்றும் கோட்பாட்டு ரீதியான நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டு இருந்ததுடன் 2022 ஆண்டு ஏற்பட்ட நெருக்கடி சுற்றாடல் (அரசியல் மற்றும் எரிபொருள்) க்கு இடையே இவ் இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாமல் போனது. | திட்டமிடப்பட்ட கருமங்கள் மூலம் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றத்தை நெருங்கிக்கொள்ள வேண்டும். |

## 3.2 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது அல்லது அதற்கு முன்னர் திணைக்களத்தினால் வாகனங்களின் திருத்த வேலை மேற்கொள்ளல் அல்லது சேவை செய்வதற்காக வழங்குனர்கள் பதிவு செய்யப்பட்டிருக்காததுடன், 2006 பெறுகை வழிகாட்டல் கைநூலின் வழிகாட்டல் 3.4 இற்கு இணங்க சிறிய பெறுமதியுள்ள வேலையொன்று அல்லது சேவை ஒன்று பெற்றுக் கொள்ளும் போது பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடையே அல்லது தொலைபேசி பெயர் பட்டியலில் மஞ்சள் பக்கத்தின் மூலம் தெரிவு செய்யப்படும் வழங்குனர்களிடம் தபால் மூலம் பெற்றுக் கொள்ளும் 03 அல்லது 05 விலைகூறல்கள் இடையே மதிப்பாய்வு செய்து தெரிவு செய்யப்படும். விலைகூறல்தாரர்களின் மூலம் குறிப்பிட்ட சேவையை பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்த போதிலும் அதற்கு முரணனாக 33 சேவை தவணைகளில் (கூறுவிலை அழைக்கப்படாமல்) ஒரே சேவை நிலையத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு ரூபா 1,350,605 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | திணைக்களத்தின் வருமானம் உழைக்கும் அலுவல்களுக்கு பாதகம் இல்லாத முறையில் திருத்த வேலைகள் மேற்கொள்வதற்காக பலவருட காலம் முதல் திருத்த வேலை மேற்கொள்ளும் நிறுவனங்களில் இருந்து விலைகூறல்கள் அழைக்கப்பட்டு முக்கியமாக பதிலளித்திருந்த குறைந்த விலைகூறல் தார்களின் மூலம் அந்த கருமத்தை நிறைவேற்றிக் கொள்ளப்பட்டது. 2023 ஆண்டு முதல் தொலைபேசி பெயர் பட்டியலின் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஹோமாகம தேர்தல் தொகுதியின் நிறுவன அட்டவணை ஊடாக திருத்த வேலைக்காக வாகனங்களை அனுப்புவதற்கும்/ விலைகூறல் அழைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகை வழிகாட்டல் கைநூலின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |